


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## டிசம்பர் - 27.12.2018


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்









## தமிழக நிகழ்வுகள்

- **அகில இந்திய சுகாதார மருத்துவ ஆராய்ச்சி பல்கலைக் கழகங்களின் மாநாடு**, தமிழ்நாடு **டாக்டர் எம்.ஜி.ஆர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது**.
  - இம்மாநாட்டில், தேசிய அளவிலான மருத்துவசேவை நீடித்த வளர்ச்சி இலக்குகளில் தமிழகம் 2வது இடத்தில் உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## இந்திய நிகழ்வுகள்

- **8 வயது முதல் 12** வயதிற்குட்பட்ட **திறமை வாய்ந்த விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பதற்காக**, தேசிய விளையாட்டுத் திறன் தேடல் (**NSTSS – National Sports Talent Search Scheme**) எனும் திட்டத்தை **மத்திய இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம்** தொடங்கியுள்ளது.

- **பிரதம மந்திரி மாத்ரு வந்தனா திட்டம்** (Pradhan Mantri Matru Vandana Yojana – PMMVY) எனும் **மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், மாநிலங்கள்** மற்றும் **யூனியன் பிரதேசங்களின் செயல்திறன் அடிப்படையில், ஆந்திரப் பிரதேசம் முன்னிலையில்** உள்ளது.
  - அதைத் தொடர்ந்து இமாச்சலப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளதாக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

- **அந்தமான் நிகோபாரில்** உள்ள **3 தீவுகளின் பெயர்களை மத்திய அரசு மாற்றவுள்ளது** அவையாவன:
  1. **ரோஸ் தீவு** என்பதை நேதாஜி **சுபாஷ் சந்திர போஸ் தீவு** என்றும்
  2. **ஹேவ்லாக் தீவு - ஸ்வராஜ் தீவு** என்றும்,
  3. **நெயில் தீவு – சாஹித் தீவு** என்றும் மாற்றப்பட உள்ளது.

- முன்னாள் **பிரதமர் வாஜ்பாய்** அவர்களின் **94வது பிறந்த நாளான, டிசம்பர் 25ல்,** அவரது **நினைவாக அவரது உருவம் பொறித்த 100 ரூபாய் நாணயம்** வெளியிடப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **சர்வதேச ஒற்றுமை** மற்றும் **அகதிகள் பாதுகாப்புக்கான ஒத்துழைப்பை** உறுதிப்படுத்தும் வகையில், **அகதிகள் மீதான உலகளாவிய உடன்படிக்கைக்கு ஐ.நா.வின் உறுப்பு நாடுகள் ஒப்புதல்** அளித்துள்ளது.
  - அமெரிக்கா மற்றும் ஹங்கேரி ஆகிய நாடுகள் மட்டும் இந்த உடன்படிக்கைக்கு எதிராக வாக்களித்தன.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **உயிரி மற்றும் விமான எரிபொருள்கள்** கலந்து உருவாக்கப்பட்ட **எரிபொருள் மூலம்**, இந்தியாவின் **முதல் இராணுவ விமானப் பயணத்தை இந்திய விமானப்படையானது, சண்டிகரில் அன் - 32 ரக போக்குவரத்து விமானத்தில் மேற்கொண்டது**.
- குறிப்பு:
  - நாட்டின் முதல் உயிரி எரிபொருள் மூலம் இயக்கப்படும் விமானமானது, டெல்லி மற்றும் டேராடூனுக்கு இடையே 2018 ஆகஸ்ட்-ல் இயக்கப்பட்டது.

## பொருளாதார நிகழ்வுகள்

- **நாட்டில் வர்த்தகம்** செய்வதற்கு உகந்த நிலைக்கான **கொள்கை சீர்திருத்தங்களையும், தளவாடங்கள் மேம்படுத்துவதில்** உள்ள சவால்களை தீர்ப்பதற்காகவும், **டாக்டர். "பிபேக் தேப்ராய்" தலைமையின் கீழ் தளவாடங்கள் மேம்பாட்டு குழுவை** மத்திய அரசு அமைத்துள்ளது.